FMS **முதல் இடைப் பருவத்தேர்வு ஜுலை – 2019**

**11** - ஆம் வகுப்பு **வணிகவியல்**

காலம் : 1.30 மணி பகுதி - I மதிப்பெண்கள் : 50

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 X 1 = 10

I **சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ............ என்று பெயர்.
   அ) அங்காடி ஆ) சந்தை
   இ) நாளங்காடி ஈ) அல்லங்காடி
2. மருத்துவர் தொழில் என்பது
   அ) வேலைவாய்ப்பு ஆ) சிறப்புத் தொழில்
   இ) தொழில் ஈ) தனியார் வணிகம்
3. வியாபாரத்திற்கு உறுதுணைபுரிபவை என்பது
   அ) வியாபாரம் ஆ) விளம்பாரம்
   இ) பண்டகசாலை ஈ) கட்டுமானம்
4. தனியார் வணிகத்தின் மிகப் பெரிய குறைபாடு
   அ) வரையரு பொறுப்பு ஆ) வரையறாப் பொறுப்பு
   இ) அமைப்பெளிமை ஈ) விரைவான முடிவு
5. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?
   அ) கர்த்தா ஆ) கூட்டுவாரிசுதாரர்
   இ) தலைமுறை ஈ) கூட்டாளிகள்
6. கூட்டுறவு தோல்வியடைவதற்கான காரணம்
   அ) வரம்பற்ற உறுப்பினர் ஆ) ரொக்க வியாபாரம்
   இ) தவறான நிர்வாகம் ஈ) இழப்பு ஏற்படுவதால்
7. கோகோ கோலா நிறுவனத்தை எதற்கு உதாரணமாய் கூறலாம்?
   அ) பன்னாட்டு நிறுமம் ஆ) அரசு நிறுமம்
   இ) இணை நிறுமம் ஈ) பொதுத்துறை நிறுமம்
8. அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு ...... க்கு குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
   அ) 75% ஆ) 60%
   இ) 95% ஈ) 51%
9. இந்திய மைய வங்கி என்பது
   அ) பி.என்.பி. ஆ) எஸ்.பி.ஐ
   இ) ஐ.சி.ஐ.சி.ஐ ஈ) ஆர்.பி.ஐ.
10. கீழ்க்கண்டவற்றில் எது தொழில் துறை வங்கி அல்ல?
    அ) ICICI ஆ) HSBC
    இ) SIDBI ஈ) IDBI

## பகுதி - II

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5 X 2 = 10

11. பண்டமாற்று முறை என்றால் என்ன?
12. வணிகத்தை வரையறுக்க.
13. தனியார் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?
14. உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
15. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
16. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
17. பின்வரும் ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுக.
அ) தனியார் துறை நிறுவனங்கள் ஆ) பன்னாட்டு நிறுவனங்கள்
18. வங்கியின் பொருளை எழுதுக.

## பகுதி - III

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5 X 3 = 15

19. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
20. மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.
21. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
22. வரையறாப் பொறுப்பு என்றால் ஏன்ன?
23. இரகசியக் கூட்டாளி என்பவர் யார்?
24. கூட்டுறவு உழவுச் சங்கம் பற்றி சிறுகுறிப்பு வரைக.
25. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.
26. உள்ளூர் பகுதி வங்கிகள் பற்றி சிறுகுறிப்பு வரைக. இரண்டு உதாரணங்கள் தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 X 5 = 15

27. அ) வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக.

*(அல்லது)*

ஆ) அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து மட்டும்)

28. அ) தனியார் வணிகத்தின் பண்புகள் யாவை?

*(அல்லது)*

இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விவரிக்க வகைப்படுத்துக.

29. அ) பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகளை விவரி.

*(அல்லது)*

ஆ) கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை?